]3] ஆய்வுக் கட்டுரைப்பொருள் : பிரதேச நாவல்கள் – யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள்,

ஆய்வாளர் : துரை மனோகரன்
தமிழ்த்துறை
யாழ்ப்பாண வளாகம்

மண்வாசனையை அடிப்படையாகக் கொண்டு பிரதேச நாவல்கள் எழுதப் படுகின்றன. பிராந்திய நாவல்கள், வட்டார நாவல்கள் மண்வாசனை நாவல்கள் என்ற பெயர்களாலும் இவ்வகை நாவல்கள் அழைக்கப்படுகின்றன. இந்நாவல்களில், குறிப்பிட்ட கதைக் கருவுக்குரிய களமாகிய நிலத்தோற்றம் அப்பிரதேசத்துக்குரிய மொழிவழக்கு, பழக்கவழக்கங்கள் ஆகியவைகள் முதன்மை பெறுகின்றன.

பிரதேச நாவல்களை எழுதுவோர் எந்தவொரு மொழியிலும் மிகக் குறைவானவர்களாகவே உள்ளனர். ஏனெனில், பிரதேச நாவல்களை எழுதுவதற்கு மிகுந்த உழைப்பும், மானிடவியல் அறிவும் அவசியமாகின்றன. மேலைநாட்டில் சிறந்த பிரதேச நாவலாசிரியர்களாக வில்லியம் ஃபோக்னரையும், தோமஸ் ஹார்டியையும் குறிப்பிடுவர். தமிழ்நாட்டில் பிரதேச நாவல்களின் மூலபிதாக்களாக கே. எஸ். வேங்கடரமணி (முருகன் ஓர் உழவன்); சண்முகசுந்தரம் (நாகம்மாள்) சங்கரராம் (மண்ணாசை) என்போரைக் குறிப்பிடுவர்.

இலங்கைத் தமிழ்நாவல்களைப் பொறுத்தவரையில், இலங்கையை–குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட முதல்நாவல் வீரசிங்கன்கதை (1908) என்பதாகும். இதில் கதை நிகழிடங்களாக மட்டுமே யாழ்ப்பாணம் முதலிய இடங்கள் இடம்பெற்றன. நொறுங்குண்ட இதயம் (1914) நாவல் தெல்லிப்பழையைக் களமாகக் கொண்டது. இவைபோன்ற சில நாவல்களின் பின், அ செ. முருகானந்தம் யாழ்ப்பாணப் பிரதேச மண்வாசனையிலும், வ. அ. இராசரத்தினம் கிழக்கிலங்கைப் பிரதேச மண்வாசனையிலும் நாவல்களை எழுதியுள்ளனர்.

1956-ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட புதிய, தேசிய, சமுதாய விழிப்புணர்வின் காரணமாகவும், அதன் தர்க்கரீதியான வளர்ச்சியின் காரணமாகவும், 1960களில் இலங்கைத் தமிழ் எழுத்தாளரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளில், மண்வாசனை, இழிசினர் வழக்கு இலக்கியம் என்ற சொற்பிரயோகங்கள் தாராளமாகப் பரிமாறப்பட்டன. 'இழிசினர் வழக்கு' என்று பண்டிதமரபினராற் பரிகாசஞ் செய்யப்பட்ட பேச்சு மொழியைத் தன்னம்பிக்கையுடன் கையாண்டு, செ. கணேசலிங்கன் தமது நீண்டபயணம் (1965) நாவலின் மூலம் கோடி காட்டியுள்ளார்.

செ. கணேசலிங்கனின் நீண்டபயணம் நாவலில், பிரதேசவாரியான மாந்தரின் பாரம்பரியங்கள் அடக்குவோரின் கொடூரங்கள், அடக்கப்படுவோரின் இன்னல்கள், அவர்களது போராட்டங்கள், முன்னேற்றங்கள் என்பன கூறப்பட்டுள்ளன. அவரது சடங்கு நாவல் யாழ்ப்பாணத்துத் திருமணம், மரணம் முதலிய சடங்கு சம்பிரதாயங்களின்போலித்தன்மைகளையும், அவற்றுக்குப் பின்னே மறைந்து கிடக்கும் மனித இதயங்களின் ஏக்கங்களையும், சித்திரிக்கிறது. போர்க்கோலம் நாவலில் யாழ்ப்பாணச் சாதியமைப்பைப் பின்னணியாகக் கொண்டு வர்க்கப் போருக்கான பாத்திரங்களை ஆசிரியர் படைத்துள்ளார்.

எஸ். பொன்னுத்துரையின் சடங்கு நாவல் சில நாட்களுக்குள் நடைபெறும் நிகழ்ச்சிகள் மூலமாக, யாழ்ப்பாண நடுத்தர மனப்பாங்கைச் சித்திரிக்கிறது.

கே. டானியலின் பஞ்சமர் நாவல் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற சாதிக் கொடுமை, ஒடுக்கப்பட்ட பஞ்சப்பட்ட மக்களின் வாழ்வு அவர்களது போராட்டம் முதலியவற்றைக் காட்டுகின்றது. அவரது போராளிகள் காத்திருக்கின்றனர் நாவல், பாஷையூர் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு, அப்பகுதிக் கடற்றொழிலாளரின் வாழ்க்கையையும் போராட்ட உணர்வுகளையும் சித்திரிக்கிறது.

செங்கை ஆழியானின் முற்றத்து ஒற்றைப்பனை வண்ணார்பண்ணையைக் களமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தவர் சிலரின் கிணற்றுத்தவளை மனோபாவத்தை விளக்குகிறது. அவரது வாடைக்காற்று நெடுந்தீவுக் கடலோரப் பகுதியைப் பகைப் புலமாகக் கொண்டு, காதல், தியாகம், ஏக்கம் முதலிய சம்பவங்களைச் சித்திரிக்கிறது. இவ்வாசிரியரது பிரளயம் நாவல் முன்னேறத் துடிக்கும் யாழ்ப்பாணப் பிரதேசச் சலவைத் தொழிலாளியின் குடும்பத்தில் நிகழும் பிரச்சினைகளைக் காட்டுகிறது.

ஏ. ரி. நித்தியகீர்த்தியின் மீட்டாதவீணை பருத்தித்துறைப் பகுதியைக் களமாகக் கொண்டு சமூக உறவுகளுக்கும் மனிதாபிமானத்துக்குமிடையே நிகழும் முரண்பாடுகளைச் சித்தரிக்கிறது.

இக்கட்டுரையில் ஆராயப்பட்ட மேற்படி யாழ்ப்பாணப் பிரதேச நாவல்களைப் பொதுவாக நோக்கும்பொழுது, சில முக்கிய குறைபாடுகள் தென்படுகின்றன. பொதுவாக எல்லா நாவலாசிரியர்களும் உரையாடல்களை அமைக்கும்போது தவறுகின்றனர். செ. கணேசலிங்கன் தமது நாவல்களின் பொருளிலும், அமைப்பிலும் செலுத்தும் கவனத்தைப் பாத்திரங்களின் உரையாடல்களிற் செலவிடத் தவறிவிட்டார். எஸ். பொன்னுத்துரையும் சில இடங்களில் உரையாடலிற் பிரதேச வழக்கைக் கையாள்வதிற் கவனக் குறைவாக இருந்துவிடுகிறார். செங்கை ஆழியானுக்கு நெடுந்தீவு மக்களின் பேச்சுமொழி நன்கு கைவரவில்லை. கே. டானியல் மட்டுமே ஓரளவு ஆற்றலுள்ள பிரதேச வழக்கைக் கையாண்டுள்ளார். கதையம்சத்தில் வாடைக்காற்று, போராளிகள் காத்திருக்கின்றனர் ஆகியவை சோடைபோய் விட்டன. மீட்டாதவீணையின் கதையம்சத்தில் பலவீனம் உண்டு.

பிரதேசநாவல் என்றால், குறிப்பிட்ட பிரதேசத்துப் பேச்சு மொழியைக் கையாள்வதோ, அந்த இடத்தைப் பூகோளரீதியாக வர்ணித்துவிடுவதோ அல்லவென்றும், ஓர் இடத்து மண்ணுக்குரிய தனித்துவ சுபாவம் காற்றாக எங்கும் பரவியிருக்கவேண்டும் என்றும் சி. சு. செல்லப்பா கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழ்ப் பிரதேச நாவல்கள் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள் — சிறந்து விளங்குவதற்கு இன்னும் எவ்வளவோ முயற்சியும் ஆற்றலும் வேண்டும்.